தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

ஆறாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2015**

**D041** மொழி வரலாறு -2

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. தமிழ் மொழியில் கிடைக்கும் மிகத் தொன்மையான எழுத்துச் சான்றுகள் எவை?
2. சகர மெய் எந்தெந்த உயிர்களுடன் சேர்ந்து சொல்லின் முதலில் வாராது என்கிறார் தொல்காப்பியர்?
3. ‘குமார் கத்தி கொண்டு பழத்தை வெட்டினான்’ – இத்தொடரில் வந்துள்ள சொல்லுருபு எது?
4. ஓவிய எழுத்து முறையில் அமைந்த மொழிகள் இரண்டனைக் குறிப்பிடுக.
5. ‘யான்’ என்னும் தன்மைப் பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது எவ்வாறு திரிபடையும்?
6. தொல்காப்பியர் ‘ஒடு’ என்பதை எந்த வேற்றுமைக்கு உரிய உருபாகக் குறிப்பிடுகிறார்?
7. சங்க காலத் தமிழில் வழங்கிய நிகழ்கால இடைநிலைகள் யாவை?
8. நன்னூலார் கருத்துப்படி பெயரெச்சம் என்பது எத்தனை வகைப்படும்?
9. ‘போது’ என்னும் சொல் உணர்த்தும் இரு பொருள்கள் யாவை?
10. ‘எய்யாமை’ என்னும் உரிச்சொல் என்ன பொருளை உணர்த்தும்?
11. ‘பழையது’ என்னும் சொல் முன்பு எதைக் குறித்தது? இன்று எதைக் குறிக்கிறது?
12. ஒரு மொழியில் அடிப்படையான உயிரொலிகள் எத்தனை? அவை யாவை?
13. வர + இல்லை – சேர்த்து எழுதி அதில் வரும் உடம்படுமெய் எது எனக் குறிப்பிடுக.
14. தமிழிலக்கண நூலார் மெல்லின ஒலிகள் என்று குறிப்பிடுவதை மொழியியலார் எவ்வாறு குறிப்பிடுகின்றனர்?
15. ‘செண்பகம்’ என்ற சொல், ஓரினமாக்கம் என்ற ஒலிமாற்றத்தால் எவ்வாறு ஒலிக்கப்படுகிறது?

## பிரிவு - 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. உருபொலியன் சொல்லெழுத்து என்றால் என்ன என்பதைச் சான்றுடன் விளக்குக.
2. தந்தை பெரியார் செய்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி எழுதுக.
3. தற்காலத் தமிழில் 'விடு' என்னும் துணைவினை தரும் பொருள்களைச் சான்றுடன் குறிப்பிடுக.
4. தற்காலத் தமிழில் ஆக்கப் பெயரடைகள் உருவாக்கப்படும் முறையை விளக்கிக் காட்டுக.
5. உல்மனின் சொற்பொருள் மாற்ற வகைகள் யாவை? அவற்றுள் ஏதேனும் ஒன்றனைச் சான்று காட்டி விளக்குக.
6. 'குப்பை' என்ற சொல் பழங்காலத்தில் உணர்த்திய பொருள்களையும் இன்று உணர்த்தும் பொருள்களையும் குறிப்பிடுக.
7. இகர ஒலி எகர ஒலியாகவும், உகர ஒலி ஒகர ஒலியாகவும் ஒலிக்கப்படுவதற்குச் சான்றுகள் காட்டுக.
8. உடம்படுமெய் ஒலிகள் வரும் சூழலைச் சான்று காட்டி விளக்குக.

## பிரிவு - 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) புணர்ச்சியில் நிகழும் எழுத்தியல் மாற்றங்களைச் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) இக்கால மொழியியலார் பதிலிடு பெயர்களை வகைப்படுத்தி ஆராய்ந்துள்ள முறையை விளக்குக.

2. (அ) வினையடையின் வளர்ச்சி வரலாறு பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ் மொழியில் நிகழ்ந்து வந்துள்ள சொற்பொருள் மாற்றங்களை வகைப்படுத்தி விளக்குக.

3. (அ) உயிர் ஒலிகள் தோன்றி வளர்ந்த வரலாறு பற்றி மொழியியலார் கூறும் கருத்துகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) வட்டாரக் கிளைமொழிகளில் ஒலி அமைப்பிலும், இலக்கண அமைப்பிலும் நேர்ந்துள்ள மாற்றங்களைச் சான்றுடன் விளக்குக.

***